பத்திரிகைகளும் சில உண்டு. ஆனால் வழக்கமாகவே தங்களுடைய போக்கினைத் திருத்தி, மாற்றி வைத்துக்கொண்டு இருக்கிறவர்களும் உண்டு என்ற திருத்தத்தோடு அதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டு, இதை ரத்து செய்யலாம் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : 30-ஆம் தேதி பேரவை நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தை ரத்து செய்யலாம் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன் என்று சொல்லுங்கள்.*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"30-4-1994 அன்று நிறைவேற்றப்பட்ட அந்தத் தண்டனை பற்றிய தீர்மானத்தை ரத்து செய்யலாம்",

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இந்தத் தீர்மானம் நிறைவேறியதை ஒட்டி, நான் காவல் துறையினருக்கு அனுப்பியிருக்கிற வாரண்டையும், அந்த சம்பந்தப்பட்ட ஆசிரியரை, சிறையில் வைப்பதற்கு சிறைத் துறைக்கு எழுதிய கடிதத்தையும் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

*சில இலங்கைப் போராளிகள் வேலூர் முகாமிலிருந்து தப்பிக்க முயன்றது குறித்து.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் கோட்டையில் உள்ள இலங்கைப் போராளிகள்

முகாமிலிருந்து இலங்கைப் போராளிகள் தப்பிக்க முயன்றதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர திரு. சி. ஞானசேகரன் அவர்கள் என்னிடத்தில் ஓர் அறிவிப்பைக் கொடுத்துள்ளார். அந்த அறிவிப்புக்கு நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். சுருக்கமாக நீங்கள் கொடுத்திருக்கிற அந்தப் பிரச்சினையை மட்டும் வாசித்து, அமரக் கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

*திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1990*-ஆம் ஆண்டு, முந்தைய ஆட்சிக் காலத்தில் இலங்கைப் போராளிகள் பலர் கைது செய்யப்பட்டு வேலூர் கோட்டையிலே திப்பு மகாலிலும், ஹைதர் மகாலிலும் அடைக்கப்பட்டார்கள். இலங்கை அகதிகள் என்பவர்களை பல இடங்களிலே ஓப்பன் கேம்பிலும் வைத்திருக்கிறோம். ஆனால் போராளிகள் என்று சந்தேகப்படுபவர்களை ஸ்பெஷல் கேம்ப் என்று ஒன்று வைத்து, ஒரு சிறையைப் போல வைத்து, அவர்களை வெளியே விடாமல், கடுமையான பாதுகாப்பின்கீழே *1990* ஆம் ஆண்டிலிருந்து வேலூர் கோட்டையிலே அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். திப்பு மகாலிலே *112* போராளிகளும், ஹைதர் மகாலிலே போராளிகள் அவர்களுடைய குடும்பங்களோடு இணைந்து வாழக்கூடிய நிலையில் *412* பேர்களும் இப்போது இருந்து கொண்டிருக்கிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்ல வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி மட்டும் இந்த அவையில் எழுப்புவதற்கு அனுமதி வழங்கி இருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போதோ நடைபெற்றதைப் பற்றி எல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களுக்கு ஏற்கெனவே சொன்னது. இப்போது இந்த முகாமிலிருந்து தப்பியது பற்றியதுதான்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்லி முடிக்கவும் என்று முதலிலேயே நான் சொன்னேன். இப்போது தப்ப முயன்று இருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அது பற்றிய விவரத்தை மட்டும் சொல்லி முடித்தால் போதும். எல்லாவற்றுக்குள்ளும் போனால், அதற்கெல்லாம் பதில் வராது. நீங்கள் அந்த மாதிரி என்னிடம் கொடுக்கவில்லை. எனவே அதெல்லாம் வேண்டாம். அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*முற்பகல் 11-55*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29.4.94 ஆம் தேதி இரவு வேலூர் கோட்டையிலே இருக்கக்கூடிய திப்பு மகாலிலும், ஹைதர் மகாலிலும் இருக்கக்கூடிய போராளிகளில் 4 பேர் 10 அடி ஆழத்திற்கு சுரங்கம் வெட்டி, அந்த முகாமிலிருந்து தப்பிக்க முற்பட்டிருக்கிறார்கள். காவலர்கள் அதைத் தடுத்து நிறுத்தி அவர்கள் கைது செய்யப்பட்டு இப்போது வழக்கும் போடப்பட்டிருக்கிறது. அந்தப் போராளிகளை அங்கே வைத்துக்கொண்டிருப்பதிலே பெரும் தொல்லைகள் தான் நமக்கு ஏற்படுகிறது. அதிகப் பணம் செலவாகிக்கொண்டிருக்கிறது. 120 போலீசார் காவலுக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைத்தால்தான் நாங்கள், வேலூர் மக்கள், நிம்மதியாக இருக்கமுடியும். ஏற்கெனவே 30 பேர் விருப்பம் தெரிவித்து அவர்கள் அனுப்பப்பட்டு விட்டார்கள். மீதி இருப்பவர்களும் போக விரும்புகிறார்கள். ** அந்தப் போராளிகளை உடனடியாக அங்கிருந்து அனுப்பி வைக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் திரும்பவும் அந்த ** தான் போகிறீர்கள். அந்த வழக்கு பற்றிய விவரம் நீங்கள் கொடுத்த இந்த அறிவிப்பில் இல்லை. 'வேறு ஏதோ வழக்கு இருக்கிற காரணத்தால்' என்று சொல்லியிருந்தால் பரவாயில்லை. அந்தக் குறிப்பிட்ட வழக்குக்குள்ளே போகிறீர்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கவேண்டாம். அவர்களை அங்கேயிருந்து (குறுக்கீடு) அனுப்பவேண்டும். அவ்வளவுதானே உங்கள் கோரிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 மே 2]

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையில் இயங்கிவரும் போலீஸ் காவலர் பயிற்சிப் பள்ளி வளாகத்திலுள்ள ஹைதர் மகால் என்னும் இடத்தில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு சிறப்பு முகாம் ஏற்படுத்தப்பட்டு, இலங்கைப் போராளிகளின் அனுதாபிகள் மற்றும் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்திற்குரிய 422 இலங்கை அகதிகளைக் கொண்ட 107 குடும்பங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும், அவர்கள் தாமாகவே சமைத்துக் கொள்வதற்குத் தேவையான உணவுப் படிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த சிறப்பு முகாமில் உள்ளவர்கள், அவர்களுடைய குடும்பத்தாருடன் வாழ்கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சிறப்பு முகாமில் இருக்கும் இலங்கைப் பெண் அகதிகளுக்கு அதிகக் கட்டுப்பாடுகள் கிடையாது. அவர்கள் காலையில் வெளியில் சென்று, வேலை செய்து, சம்பாதித்து மாலையில் திரும்பி வரும் வகையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை அகதிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தாயகத்திற்குத் திரும்பச் செல்ல இந்த அரசு எல்லா வகையிலும் உதவிகளைச் செய்து வருகின்றது. இந்நிலையில் 28.4.1994 அன்று ஹைதர் மகால் சிறப்பு முகாமில் அறை எண். 101 க்குப் பின்னால் உள்ள தடுப்புச் சுவருக்கு அருகில் சுமார் 2' அகலமும் 3 1/2' ஆழமும் உள்ள ஒரு பள்ளம் தோண்டப்பட்டுள்ளதைக் காவலர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஹைதர் மகால் சிறப்பு முகாமில் இருந்து அகதிகள் தப்பிச் செல்வதற்காக அந்தப் பள்ளம் தோண்டப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில், போலீசார் தீவிர விசாரணை செய்தனர். அதைத் தொடர்ந்து தங்க வேலாயுதம் என்கின்ற சின்னக்குட்டி, நாகராஜன், ஆதி என்கின்ற பாலகிருஷ்ணன், மோல்டன் ஆகிய நான்கு நபர்கள் தப்பிச் செல்வதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, இந்தியத் தண்டனைச் சட்டம் 224, 511 மற்றும் 225 பி ஆகிய பிரிவுகளின் கீழும் மற்றும் Tamil Nadu Public Property (Prevention of Loss and Damage) Act, பிரிவு 2 ன் கீழும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அந்த நான்கு பேரும் வேலூர் மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 மே 2

தமிழக அரசைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இருக்கிற இலங்கை அகதிகள் அனைவரையும் அவர்களுடைய தாயகத்திற்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்கின்ற கொள்கையில் நிலையாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை இந்த அரசின் முயற்சியால் 11,934 குடும்பங்களைச் சார்ந்த 39,603 இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இருந்தும் கூட, இன்னமும் தமிழகத்தில் 69,150 இலங்கை அகதிகள் 122 அகதிகள் முகாமில் இருக்கின்றனர். அதைத் தவிர, காவல் நிலையங்களில் பதிவு செய்து கொண்டு, இதுபோன்ற அகதிகள் முகாம்களில் தங்காமல் வெளியில் குடி இருந்துவரும் 31,658 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். மேலும் இலங்கைப் போராளிகளின் அனுதாபிகள் மற்றும் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்திற்குரிய 1,629 இலங்கை அகதிகள் பல்வேறு சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அகதிகளைப் பொறுத்தவரை, அவர்களுடைய சம்மதத்தின் பேரில் அரசே அவர்கள் தாயகத்திற்கு திரும்பச் செல்வதற்கு ஆகும் செலவை ஏற்றுக்கொண்டு அவர்களை இலங்கைக்கு விரைந்து அனுப்ப துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் சிறப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கைப் போராளிகளின் அனுதாபிகள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோரை அவர்களுடைய தாயகத்திற்குத் திருப்பி அனுப்பி வைப்பதில் தமிழக அரசிற்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அவர்களாகவே முன்வந்து அவர்களுடைய சொந்தச் செலவில் செல்ல விரும்பினால், அவர்கள் மீது எந்தவிதமான குற்ற வழக்குகளும் இல்லாது இருந்தால், அவர்கள் இந்தச் சிறப்பு முகாமிலிருந்து அவர்களுடைய தாயகத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரையுமே அவர்களுடைய தாயகத்திற்குத் திருப்பி அனுப்புவது என்பது, தமிழகத்திற்கு மட்டுமின்றி இந்தியாவிற்கே ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால், அவர்கள் அனைவரையும் அவர்களுடைய தாயகத்திற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசைக் கோரியதோடு மட்டுமல்லாமல், அதனை வலியுறுத்தி 1.11.1993 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதம் ஒன்றினை எழுதி இருக்கின்றேன். அதன் பின்னர், கடந்த 14.2.1994 அன்று டில்லியில் பிரதமரைச் சந்தித்தபோதும் நேரில் வலியுறுத்தினேன். மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் 2 முறை சென்னை வந்தபோதும், அவரிடமும் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

1994 மே 2] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

நண்பகல் 12-00

சிறப்பு முகாம் என்பது வேறு; சிறைச்சாலைகள் என்பது வேறு. இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாமல், இந்த முகாம்களில் நடைபெறும் சம்பவங்களை சிறைச்சாலைகளில் நடைபெறும் சம்பவங்களுடன் இணைத்துப் பேசுவது சரியாக இருக்காது என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான எனது பதிலுரையில் இது குறித்து விவரமாகக் குறிப்பிட்டு இருந்தேன். சிறப்பு முகாமில் தொடர்ந்து 3 ஆண்டுகாலமாக இலங்கை அகதிகள் இருந்து வருகின்ற காரணத்தினாலும், உடனடியாக, தாயகம் செல்ல இயலவில்லையே என்ற ஆதங்கத்தினாலும் வெறுப்பு, அடைந்து சில நேரங்களில் தப்பிச் செல்கின்ற முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இத்தகைய சூழ்நிலை ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுங்கள் என்று மத்திய அரசைப் பல முறை வற்புறுத்தி வந்து உள்ளோம். தமிழக அரசின் எல்லாக் கோரிக்கைகளையும் விரைவில் மத்திய அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தச் சம்பவத்தையொட்டி வேலூரில் எந்தவிதமான பதட்டமான சூழ்நிலையும் நிலவவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சம்பவத்தில் சந்தேகப்படும் நபர்களை காவல் துறையினர் ஏற்கெனவே கைது செய்து மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. விதி 110—ன் கீழ் தொழில் துறை அமைச்சரின் அறிக்கை

### சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவை விதி 110-ன் கீழ் பேரவையில் ஓர் அறிக்கையினை வைத்திட மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையினை இப்போது அவர் பேரவைக்கு வைக்கலாம்.

*மாண்புமிகு தி. ந. ம. சின்னசாமி:* பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் பேரவையில் ஓர் அறிக்கை வைக்க அனுமதி கோரி இருந்தேன். நீங்கள் அனுமதி அளித்து இருக்கிறீர்கள்.